**அ.வ.எண்.215/2023**
**பி.வா.சா.2 : சுப்பிரமணி**
**தேதி : 02.03.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வாதி செல்லம்மாளுக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. பூர்வீக சொத்து 3.31 ஏக்கரும், 2001–ல் 6 ஏக்கர் வாதியின் தகப்பனார் பெயருக்கு கிரையம் வாங்கப்பட்டுள்ளது. நான் மனவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு மனவாடி கிராமத்தில் விவசாய நிலங்கள் கிடையாது. நான் விவசாய கூலி வேலை செய்யவில்லை நான் கறிக்கடை வைத்துள்ளேன். வாதிக்கு 2 மகள்கள். 1ம் பிரதிவாதியின் பெண் பெங்களுரில் உள்ளார். வாதியின் மகள்களுக்கு 1ம் பிரதிவாதி திருமணத்திற்கு எந்த செலவும் செய்யவில்லை என்றும் நீங்கள் பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் வாய்மொழி எழுத்துமூலமாக எந்த பாகப்பிரிவினையும் செய்து கொள்ளவில்லை. வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். மேற்சொன்ன வாய்மொழி பாகப்பிரிவினை 2001 ஆம் ஆண்டில் செய்து கொண்டார்கள். 1ம் பிரதிவாதி அவரது தந்தைக்கு பாகப்பிரிவினைக்காக பணம் எதுவும் கொடுக்கவில்லை. மணவாடி கிராமத்திற்கும் ஏமூர் கிராமத்திற்கும் இடையே திண்டுக்கல் பிரதான சாலை தான் உள்ளது. 1ம் பிரதிவாதியும் அவரது தந்தையும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து

கொண்டார்கள் என்று நீங்கள் பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகக்கறார் நடக்கவில்லை நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.02 18:47:09 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.